எஸ்.பி.எம்.எல். துப்பாக்கியிலிருந்து வெளிவந்த ரவைக்குண்டுகள் ரயில் வண்டியையும் அதிலிருந்த ரயில் பணியாளர்களையும் தாக்கின. இந்தச் துப்பாக்கிச் சூட்டில் எந்தவிதமான உள் நோக்கமும் இல்லை. குற்றவாளி துப்பாக்கியைக் கவனக்குறைவாகப் பயன்படுத்தியதற்காக பறங்கிப்பேட்டை குற்றத்துறைத் துணை நீதிபதி அவருக்கு ரூ. 50 அபராதம் விதித்தார்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் எத்தனை பேர் காயம் பட்டார்கள்? அவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இது துப்பாக்கிப் பிரயோகம் அல்ல. மூயலுக்கு குறி வைத்தார், அது ரயிலுக்குப் போனது. இதனால் ரயில் டிரைவருக்கும் பயர்மேன் இரண்டு பேர்களுக்கும் சிறு காயம் ஏற்பட்டது. அவர்களுக்கு நஷ்ட ஈடு எதுவும் தரப்படவில்லை.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, இது போன்ற நிகழ்ச்சிகள் இனிமேல் ஏற்படாமலிருப்பதற்காக அரசு முன் ஏற்பாடுகள் ஏதாவது செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, துப்பாக்கி லைசென்ஸ் பெற்றிருப்பவர்கள் ஒழுங்காகக் குறி பார்ப்பதுதான் தக்க ஏற்பாடு.

Betting on New York Cotton

* 530 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether any special drive to check betting on New York Cotton is under taken by the Madras City Police?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :

ஆம்.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : தலைவர் அவர்களே, நியூ யார்க் பருத்தியின்பேரால் நடத்தப்படும் சூதாட்டத்தினால் பல பேர்கள் கெட்டுப் போய்விட்டார்கள். ஆகையால் இதை வன்மையாகத் தடுப்பதற்கு அதிகமான கவனத்தை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இதற்கு காவல் துறையில் தனிப்பிரிவுகள் அமைக்கப்பட்டு இந்தச் சூதாட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்றுதான் முன்பு முயற்சிகள் எடுக்கப்பட்டன. கலைக்கப்பட்ட தனிப் பிரிவை மீண்டும் ஏற்படுத்துவதன் அடிப்படையிலேயும், மீண்டும் விழிப்பாக இருக்க வேண்டுமென்ற அடிப்படையிலேயும் போலீஸ் கமிஷனர் அறிவுறுத்தப்பட்டு, அவரும் தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

1970 மார்ச் 25]

திரு. வி. கே. கோதண்டராமன்: இந்த காட்டன் மார்க்கெட் சூதாட்டத்தைத் தடுப்பதற்கு இப்போது தனியான ஒரு பிரிவையே ஏற்படுத்தியிருந்தாலும், பகிரங்கமாக ராசி பலன் என்ற பெயராலே, எதிர்காலம் என்ற பெயராலே 5 பைசா வெளியீடு வருவதும் முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? மேலும் தீவிரமான நடவடிக்கை எடுக்க, மேலும் பல நடவடிக்கைகளை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஒரு மேலும் என்ன? மேலும் மேலும் மேலும் தீவிர முயற்சி எடுக்கப்படும்.

திரு. கே. விநாயகம்: பஞ்சு விலைகள் வைத்து சூதாடுகிற போக்கு மூன்றாண்டுகளுக்கு முன்னாலே அதிகமாக இருந்தது, பின்னர், ஒழிக்கப்பட்டது. திரும்பவும் அதிகமாகத் துவங்கி யிருக்கிறது. சாக்பீசில் ரோடுகளில் எழுதுகிறார்கள். இதைப் போலீஸ் அதிகாரிகள் விட்டிருக்கிறார்களே, இதைக் கண்டுபிடிக்க ஸ்பெஷல் விங் போட்டாலும் தீவிர வேறு நடவடிக்கைகளையும் எடுக்க உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது பற்றி இப்போதுதான் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. காவல்துறை அதிகாரி களுடன் கலந்து பேசி தக்க முடிவு எடுக்கப்படும்.

திரு. கே. போஜன்: நியுயார்க் காட்டன் மார்க்கெட்டிங் பெட்டிங் போல குதிரைப் பந்தயத்திலும் பலர் பெட் கட்டி அழி கிறார்களே, குதிரைப் பந்தயத்தையும் தடுக்க அரசாங்கம் நட வடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: குதிரைப் பந்தயத்தை நீக்கிவிட வேண்டும் என்பதே அரசாங்கத்தின் கொள்கை. ஆனால் மாநில அளவில் இதை நாம் நிறுத்திவிட்டால் இந்த மாநிலத் திற்குக் கிடைத்துக்கொண்டிருக்கிற வருமானம் வேறு மாநிலத் திற்குத்தான் செல்லக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே இது அகில இந்திய ரீதியில் தடுக்கப்பட வேண்டும் என்பது இந்த அரசாங் கத்தின் கொள்கை. ஆகவே இந்திய சர்க்கார் இதுபற்றி ஒரு முடிவு எடுத்தால்தான் அவர்களைக் காப்பாற்ற முடியும்.

திரு. மு. ச. சிவசாமி: சாதாரண ஜனங்கள் பருத்தி சூதாட்டத்தில் ஈடுபடுவது பத்திரிகைகளில் வருகிற நியுயார்க் காட்டன்விலை பற்றிய புள்ளிவிவரங்களைக்கொண்டுதான். மக்களுக்கு அதன் விலை இன்னதென்று தெரியாத வகையில், பத்திரிகையில் அந்தப் புள்ளிவிவரம் போடாதிருக்க தக்க வழி வகை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பத்திரிகையில் புள்ளிவிவரம் போடுவதைத் தடுக்க எந்தவிதமான வழியும் இல்லை